***கவனிக்க.*** *- 2018.02.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2058 - 2018 පෙබරවාරි මස 09 වැනි සිකුරාදා - 2018.02.09

*2058 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *182* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *186* |

**கவனிக்க.**- கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் 2018, சனவரி மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, மாச்சு மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

179-B81250 - 5403 (2018/02)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** :யில் அல்லது **தமிழ் மொழி** :யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 **சிங்கள மொழி** மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம்

### சாரதி தரம் III இற்குரிய பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரல்

நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகத்தில் நிலவும் சாரதி தரம் III இற்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் தகைமையுடைய ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கொழும்பு 12, புதுக்கடை எனும் முகவரியில் அமைந்துள்ள நீதிச்சேவைகள் ஆணைக்குழு செயலகத்தில் சாரதி தரம் III இற்குரிய வெற்றிடங்கள் இரண்டு (02) நிலவுகின்றன. வழங்கப்படும் நியமனங்களின் எண்ணிக்கை, நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி என்பவை நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையினை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாமல் இருப்பதற்குரிய அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

3. **சம்பள அளவுத் திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்திற்கு அமைவாக சம்பள அளவு PL 3-2016 ஆகும். அதாவது ரூ. 25,790 - 10 x 270 - 10 x 300 - 10 x 330 - 12 x 350 - ரூபா 38,990 ஆகும். (2020.01.01 ஆந் திகதிவரை பொ. நி. சு. 3/2016 இன் அட்டவணை II இற்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.)

4. பதவிக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் எதிர்காலத்தில் எடுக்கக்கூடிய கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உத்தியோகத்தர்கள் கட்டுப்படல் வேண்டும்.

5. முதல் நியமனம் பெறும் சேவை நிலையத்தில் குறைந்தது 03 வருடங்கள் சேவையாற்ற வேண்டும். எவ்வாறாயினும் ஏதேனும் விசேட காரணங்களுக்கு அமைவாக அக்காலப்பகுதி நிறைவடைவதற்கு முன்னர் உத்தியோகத்தர் ஒருவரை இடமாற்றம் செய்ய வேண்டிய தேவையேற்படின் நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு.

6. **கல்வித் தகைமைகள்**.- கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் மொழி உட்பட இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

7. **தொழில்சார் தகைமைகள்** :

(i) தனியார்/வாடகை வாகனங்கள் மற்றும் வெற்று எடை 24 அந்தருக்குக் குறைவான ஸ்ரேசன் வெகன் வாகனங்களை செலுத்துதல் தொடர்பாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்களைச் செலுத்துதல் தொடர்பான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல். (ஆட்சேர்ப்பு செய்யப்படும் தினத்திற்கு மூன்று (03) வருடங்களுக்கு முன்னர் குறைந்தபட்சம் சி மற்றும் சி1 வாகன வகுப்பின் அனுமதிப்பத்திரமொன்று அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு அமைவாக பி வகுப்பிற்குரிய அனுமதிப்பத்திரமொன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.)

(ii) பெருந்தெருக்கள் சட்டக்கோவை தொடர்பாக போதிய அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8. **அனுபவம்**.- வாகன சாரதியாக மூன்று வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் அதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.)

9. **உடற்தகைமைகள்** :

(i) ஆகக்குறைந்தது 5 அடி உயரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
(ii) பகல் மற்றும் இரவு நேரத்தில் சேவையில் ஈடுபடக்கூடிய வகையில் நல்ல பார்வைத் திறனும் உடல் ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அரச வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் முறையான சான்றிதழ் மூலம் அது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

10. **வேறு தகைமைகள்** :

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரி நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும்.
(iii) சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருக்க வேண்டியது கட்டாயமாகும்.

11. **வயது எல்லை**.- விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடனான நியமனத்தைக் கொண்டவர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

12. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- தொழில்சார் தகைமைப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சை மூலம்.

* தொழில்சார் தகைமைப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் முறை பின்வருமாறு :

| விடயங்கள் | உச்ச புள்ளிகள் | சித்தியடைய பெறவேண்டிய புள்ளிகள் |
|---|---|---|
| (i) வாகனம் செலுத்துதல் தொடர்பான நிபுணத்துவம் | 40 | 20 |
| (ii) பெருந்தெருச் சட்டங்கள் தொடர்பான நடைமுறை ரீதியான அறிவு | 40 | 20 |
| (iii) மோட்டார் இயந்திரவியல் தொடர்பான அடிப்படை அறிவு | 20 | 10 |

* பொதுவான நேர்முகப் பரீட்சையின்போது அடிப்படைத் தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படுவதுடன் அதற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

13. விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிகவும் கவனத்துடன் சரியான தகவல்களை வழங்க வேண்டும். தகைமைகளைப் பரீட்சித்துப் பார்க்கும்போது நபரொருவர் தகைமையற்றவர் எனத் தெரியவந்தால் அவரின் பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும். விண்ணப்பதாரியினால் வழங்கப்பட்ட தகவலொன்று பிழையானது என எச்சந்தர்ப்பத்திலேனும் தெரியவருமாயின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

14. உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அதற்கமைவாகத் தயாரிக்கப்படாத, முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் பூரணப்படுத்தப்படாமையினால் ஏற்படக்கூடிய பாதிப்பினை விண்ணப்பதாரி பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

15. சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2018.02.28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் **“செயலாளர், நீதிச்சேவைகள் ஆணைக்குழுச் செயலகம், புதுக்கடை, கொழும்பு 12”** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

16. விண்ணப்பப்படிவத்தைக் கொண்ட கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் **“சாரதிச் சேவையின் தரம் - ஐஐஐ இற்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்”** எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைக்கு அமைவாக,

சஞ்ஜீவ சோமரத்ன,
செயலாளர்,
நீதிச்சேவைகள் ஆணைக்குழு.

நீதிச்சேவைகள் ஆணைக்குழு செயலகம்,
கொழும்பு 12,
2018, சனவரி 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தில் சாரதி சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்**

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்காக)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

4. நிரந்தர முகவரி :----.

5. ஆண்/பெண் நிலை : ஆண்-0, பெண்-1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

6. பிறந்த திகதி :

வருடம் | | | | | மாதம் | | | திகதி | | |

7. விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

8. உயரம் :----.

9. சிவில் அந்தஸ்து :----.

10. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | | | |

11. கல்வித் தகைமைகள் :

(i) முதலாம் அமர்வு :
வருடம் :----.
சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 01. | | 06. | |
| 02. | | 07. | |
| 03. | | 08. | |
| 04. | | 09. | |
| 05. | | 10. | |

(ii) இரண்டாவது அமர்வு :
வருடம் :----.
சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 01. | | 06. | |
| 02. | | 07. | |
| 03. | | 08. | |
| 04. | | 09. | |
| 05. | | 10. | |

12. க. பொ. த. (உ. தர) பரீட்சை தொடர்பான விபரம் :

(i) பரீட்சை நடைபெற்ற வருடம் மற்றும் மாதம் :----.
(ii) சுட்டெண் :----.
(iii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 01. | |
| 02. | |
| 03. | |
| 04. | |

13. சாரதி தொழில் தொடர்பான அனுபவமும் தேர்ச்சியும் :----.
(வீதிச் சட்டக்கோவை தொடர்பான அறிவு இருத்தல் வேண்டும்)

14. சாரதி தொழிலில் ஈடுபடுவதற்கு உடற்தகுதியுடன் உள்ளீர்களா ? சிறந்த பார்வைத் திறன் இருக்கின்றதா ? (மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

ஆம் ☐

இல்லை ☐

(உரிய கூட்டினுள் ( ✓ ) அடையாளமிடுங்கள்)

**குறிப்பு**.- உரிய சான்றிதழ்களின் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரத்தின் நிழற்பிரதிகளை இணைத்து அனுப்பவும்.

15. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ?

ஆம் ☐

இல்லை ☐

(உரிய கூட்டினுள் ( ✓ ) அடையாளமிடுங்கள்)

16. மேலுள்ள கேள்விக்கான பதில் "ஆம்" எனின், அது தொடர்பில் விபரிக்குக :
-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------
-----------------------------------------------------------------

17. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்விண்ணப்பப்படிவத்தில் ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமல் அல்லது பிழையாக பூரணப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்களை ஏற்றுக்கொள்வதாக இத்தால் உறுதியளிக்கின்றேன். மேலும் இவ்விண்ணப்பப்படிவத்தின் அனைத்துப் பகுதிகளும் சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) மேற்குறிப்பிட்ட விடயங்கள் பொய்யானவை என்பது நிரூபிக்கப்பட்டால், நியமனம் வழங்கப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவராவதுடன் நியமனம் பெற்ற பின்னர் பதவியிலிருந்து நீக்கப்படலாம் என்பதனையும் நன்கு அறிவேன்.

(இ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பின்னர் மாற்றத்திற்கு உட்படுத்த மாட்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.)

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................ என்பவர் ............... திகதி தொடக்கம் இவ் அலுவலகத்தில் சேவையாற்றுவதுடன் அவரது வேலை, வரவு மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும், மேற்படி பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் இவ் அலுவலகத்திலிருந்து விடுவிக்க முடியும் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
*திணைக்களத் தலைவர்*
(உத்தியோகபூர்வ இலச்சினை).

*திகதி :----.*

*02-216*

---

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

*திருத்தம்*

### நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சு

*நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவப் பிரிவின் வதிவிடத் திட்ட முகாமையாளர் தரம் III இற்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017*

*2017.11.30 ஆந் திகதிய 2048 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவின் வதிவிடத் திட்ட முகாமையாளர் பதவி தரம் III இற்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2018, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் வர்த்தமானி அறிவித்தல் கீழ்க்குறிப்பிடப்படும் வண்ணம் திருத்தம் செய்யப்படுகின்றது.* ***இதுவரையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டியது அவசியமில்லை. இருந்தும் திருத்தம் செய்யப்பட்ட இலக்கம் 2 மற்றும் 3 இற்கு அமைய விண்ணப்பப்படிவத்திலுள்ள குறைபாடுகள் பூரணப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும்.***

*திருத்த இலக்கம் 01 :*

*1.* ***ஆட்சேர்ப்பு முறை.***- இப்பதவிக்குப் பொருத்தமான தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இதற்காக எழுத்துப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சையும் இடம்பெறும்.

*திருத்த இலக்கம் 02 :*

*2. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற எடுகோளுக்கு இணங்க அறிவித்தலில் குறிப்பிடப்படும் வயது எல்லைக்குட்பட்ட, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று அல்லது அத்தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன், சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பட்டப்படிப்புச் சான்றிதழின் பிரதி, பிறப்புச் சான்றிதழின் பிரதி, தேசிய அடையாள அட்டையின் புகைப்படப் பிரதிகளைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படுவதுடன் அது சம்பந்தமாக செய்திப்பத்திரிகை அறிவித்தலும், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்பும் தமது அனுமதி அட்டைகள் கிடைக்காத பரீட்சார்த்திகள் இருப்பார்களானால் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டபடி அது சம்பந்தமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவில் தொடர்புகொண்டு வினவுதல் வேண்டும். அவ்வாறு தொடர்பு கொண்டு வினவும்போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் விலாசத்தினைச் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் வசிப்பவர் எனின், அந்த விபரத்துடன் தொலைநகல் ஊடாக பரீட்சை அனுமதி அட்டையினை விரைவாகப் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு*

விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிதத்தினை அறிவித்தலில் குறிப்பிடப்படும் தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவதுடன், இது சம்பந்தமாக தொடர்புகொண்டு வினவுதல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதாவது ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்னுடன் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதி/பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டுமானால் அதற்குரிய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தினை தபால் மூலம் பதிவுசெய்து அனுப்பிய பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருத்தல் பிரயோசனமானதாகும்.

திருத்த இலக்கம் 03 :

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சின் வதிவிடத் திட்ட முகாமையாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2017**

Open Competitive Examination for Recruitment of Officers for the Post of "Resident Project Manager" of the Irrigation Management Division (IMD) of Ministry of Irrigation & Water Resources Management - 2017

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம்-2 ☐
தமிழ்-3
(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்.)

1. (அ) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) திரு./ திருமதி/ செல்வி :----.
(உதாரணம்- GUNAWARDHANA, H. M. S. K.)

(ஆ) முதல் எழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) திரு./ திருமதி/ செல்வி :----.

(இ) முதல் எழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) திரு./ திருமதி/ செல்வி :----.

2. (i) நிரந்தர விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(ii) அனுமதி அட்டை அனுப்பவேண்டிய விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(iii) தொலைபேசி இலக்கம் :
நிலையான :----.
கையடக்கம் :----.

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4. பால் (ஆண்/ பெண்) :
(பெண்-1, ஆண்-0) ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

5. பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

6. விண்ணப்ப இறுதித் திகதியில் வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

7. விவாக நிலை :
திருமணமாகாதவர்-1
திருமணமானவர்-2 ☐
(உரிய இலக்கத்தைக் கூட்டில் எழுதவும்)

8. (i) பெற்றுக்கொண்டுள்ள பட்டமும், வருடமும் :----.

(ii) சித்தியின் தன்மை- சாதாரணம்/ வகுப்பு I/ வகுப்பு II (கீழ்/ மேல்)

விசேடம்/ கௌரவம் வகுப்பு I/ வகுப்பு II (கீழ்/ மேல்)

(iii) உரித்தான பாடங்கள் :----.

9. பரீட்சைக் கட்டணம் (பரீட்சைக் கட்டணம் இதற்கு முன் செலுத்தியிருப்பின் i தொடக்கம் iv வரை பூரணப்படுத்தப்படல் வேண்டும்.) :

(i) செலுத்திய தபால்/ உப தபால் அலுவலகம் :----.

(ii) செலுத்திய தொகை :----.

(iii) செலுத்திய திகதி :----.

(iv) பற்றுச்சீட்டின் இலக்கம் :----.

| |
|---|
| பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை கழன்று விடாதவாறு இங்கு ஒட்டவும்.<br>பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை உடன் வைத்திருத்தல் பயன்மிக்கது. |

மேற்குறிப்பிட்ட விடயங்கள் பிழையற்றதும் உண்மையானதும் எனவும் வெளிப்படுத்துகின்றேன். என்னால் வழங்கப்படும் தகவல்கள் உண்மையற்றது என பின்னர் தெரியவரும் வேளையில் சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என நான் அறிவேன். மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற உரித்துள்ளது எனவும், இப்பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதற்கு எனது சம்மதத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் (திரு./ திருமதி/ செல்வி) .................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன் எனவும், அவரால் எனது முன்னிலையில் ............................ ஆந் திகதி கையொப்பமிடப்பட்டது எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
(பதவி முத்திரையால் உறுதிப்படுத்தவும்.)
திகதி :----.
(தேவையற்ற வசனங்களை வெட்டிவிடவும்.)

11. நிறுவனத் தலைவரின் அத்தாட்சிப்படுத்தல் (அரச/ மாகாண சபை/ அரச கூட்டுத்தாபனத்தில் கடமை புரியும் விண்ணப்பதாரர்களுக்காக மட்டும்) :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் (திரு./திருமதி/செல்வி) .................................... இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ...................................................... ஆக சேவை மேற்கொள்வதுடன் அவருடைய விண்ணப்பப்படிவத்தினை அத்தாட்சிப்படுத்தி அனுப்புகின்றேன். இந்தப் பதவிக்காகத் தெரிவுசெய்யப்படின் இந்த நிறுவனத்திலிருந்து விடுவித்துக்கொள்ள முடியும்.

.................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
விலாசம் :-----.
திகதி :-----.
(பதவி முத்திரையால் உறுதிப்படுத்தவும்).

சந்திகா வி. எதுகல,
பணிப்பாளர்,
நீர்ப்பாசன முகாமைத்துவப் பிரிவு.

நீர்ப்பாசன திணைக்கள கட்டிடம்,
பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 07,
2018, சனவரி 24.

02-319

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.